DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

Depositions of Witness for Prosecution Pw 3
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சதீஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of November 2025.

**(A1 absent. Petition filed and allowed. A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்து வருகிறேன். தற்போது சென்னையில் சரவணா ஸ்டோர்ஸ் பாத்திரக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வத்தை எனக்கு தெரியும். ஆஜர் 2 ம் எதிரியை எனக்கு தெரியும். 1ம் எதிரி சரவணனையும் எனக்கு தெரியும், இவர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது-

சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் எங்கள் ஊரிலிருந்து கொத்தனார் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் மாரிச்செல்வத்தை கொலை செய்துவிட்டார்கள், அதுபற்றி உனக்கு தெரியுமா என்று போலீசார் என்னிடம் கேட்டார்கள், நான் தெரியாது என்று சொன்னேன். போலீசார் என்னை வேறு எதுவும் கேட்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 23.04.2022 ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த மாரிச்செல்வம் என்பவரை எதிரி சரவணன் என்பவர் வழிமறித்து டிப்பர் லாரி வண்டியை சேதப்படுத்தியது தொடர்பான முன் விரோதத்தில் தன்னிடமிருந்த அரிவாளால் மாரிச்செல்வத்தை மாறி மாறி வெட்டினார் என்றும், அருகில் நின்றுகொண்டிருந்த மாரிச்செல்வத்தின் அண்ணன் முப்புடாதி மற்றும் அவரது பெரியப்பா மகன் முப்புடாதி அதை தடுக்க முயற்சி செய்தபோது, பக்கத்தில் வந்தால் உங்களையும் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு தன்னுடைய இருசக்கர வாகனத்தில் தப்பி சென்றுவிட்டார் என்றும், சம்பவ இடத்திலேயே மாரிச்செல்வம் இறந்துவிட்டார் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 4 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. வெங்கடேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of November 2025.

**(A1 absent. Petition filed and allowed. A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்து வருகிறேன். தற்போது கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வத்தை எனக்கு தெரியும். ஆஜர் 2 ம் எதிரியை எனக்கு தெரியும். 1 ம் எதிரி சரவணனையும் எனக்கு தெரியும், இவர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள்தான். கொலை சம்பவத்தை நான் நேரில்

பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது- போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 23.04.2022 ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த மாரிச்செல்வம் என்பவரை எதிரி சரவணன் என்பவர் வழிமறித்து டிப்பர் லாரி வண்டியை சேதப்படுத்தியது தொடர்பான முன் விரோதத்தில் தன்னிடமிருந்த அரிவாளால் மாரிச்செல்வத்தை மாறி மாறி வெட்டினார் என்றும், அருகில் நின்றுகொண்டிருந்த மாரிச்செல்வத்தின் அண்ணன் முப்புடாதி மற்றும் அவரது பெரியப்பா மகன் முப்புடாதி அதை தடுக்க முயற்சி செய்தபோது, பக்கத்தில் வந்தால் உங்களையும் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு தன்னுடைய இருசக்கர வாகனத்தில் தப்பி சென்றுவிட்டார் என்றும், சம்பவ இடத்திலேயே மாரிச்செல்வம் இறந்துவிட்டார் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 5<br>Defence<br>Court |
| Name | : | திரு. ராமர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of November 2025.

**(A1 absent. Petition filed and allowed. A2 Present. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யாபுரத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 23.04.2022 ம் தேதி மாலை 04.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள மணக்கவுடையார் சாஸ்தாகோவில் அருகே நடந்த மாரிச்செல்வம் கொலை சம்பவம் தொடர்பாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். ஆய்வாளர் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு விசாரணை

செய்து தயார் செய்த அந்த பார்வை மகசரில் நானும், சந்திரன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்துபோட்டோம். அந்த பார்வை மகசர் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது. அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 2** ஆகும். பின்னர் சம்பவ இடத்தின் அருகே இருந்த ரத்தம் பட்ட தார் ரோடு துண்டு, ரத்தம் படாத தார் ரோடு துண்டு, மாரிச்செல்வத்தின் மஞ்சள் கலர் இருசக்கர வாகனம் ஆகியவற்றை போலீசார் ஒரு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியிலும் நானும், சந்திரன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்துபோட்டோம். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 3** ஆகும். ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றிய ரத்தம் பட்ட தார் ரோடு துண்டுதான் என்னிடம் காட்டப்படுவது. **ரத்தம் பட்ட தார் ரோடு துண்டு சா.பொ.14** ஆகும். **ரத்தம் படாத தார் ரோடு துண்டு சா.பொ.15** ஆகும். சம்பவஇடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட மாரிச்செல்வத்தின் **மஞ்சள் கலர் இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ- 4** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi